**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 256/மா/2025
நாள் 12 .02.2026

Rm. சேவுகன் செட்டியார்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
மண்டலம் 2 (வடக்கு)
மதுரை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை, தி. நகர், சிவபிரகாசம் தெரு, கதவு எண் 8/6 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. Rm.சேவுகன் செட்டியார் என்பவரின் நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.06.2025 அன்று பெறப்பட்டு, 256/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, தி. நகர், சிவபிரகாசம் தெரு, கதவு எண் 8/6 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. Rm.சேவுகன் செட்டியார் என்பவர் தனது நாளிடப்படாத மனுவில் இணைத்துள்ள மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"மதுரை மாநகராட்சியில் மண்டலம் எண் 2, வார்டு எண் 33, K.K. நகர் கிழக்கு 4–வது தெரு, பிளாட் எண் 93, கட்டிடம் என் மனைவி லெட்சுமி ஆச்சி பெயரில் வரிவிதிப்பு இருந்து வருகிறது. என் மனைவிக்கு தற்போது 75 வயது ஆகிறது. என் மனைவிக்கு உடல்நலம் சரியில்லாததால் படுக்கையிலிருந்து ஓய்வு பெற வேண்டுமென்று மருத்துவர்களின் ஆலோசனையின் பிரகாரம் சென்னையில் இருந்து வருகிறார். ஆகவே, என் மனைவிக்கு பதிலாக கணவன் என்கின்ற முறையில் முறைமன்ற நடுவத்தில் ஆஜராக என்னை அனுமதிக்க பணிவுடன் வேண்டுகிறேன்.

இந்த நிலையில், மதுரை மாநகராட்சியில் குடியிருப்பு பகுதிக்கு பழைய வரிவிதிப்பு எண் 115/10891, புதிய வரிவிதிப்பு எண் 115/033/900645 பிரகாரம் குடியிருப்பு பகுதிக்கும், பழைய வரிவிதிப்பு எண் 115/393155, புதிய வரிவதிப்பு எண் 115/033/901162 பிரகாரம் வணிக பகுதிக்கும் வரிவிதிப்பு இருந்து வந்தது. வணிக கட்டிடத்தை 01.04.2012 முதல் அரைவருட வரியாக ரூ.24,566/– என வரி விதிக்கப்பட்டு 2018–2019–2வது அரையாண்டு முடிய வரி

செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், வணிக பகுதியிலிருந்த நிறுவனங்கள் காலி செய்யப்பட்டு 23.09.2020 முதல் வணிக பயன்பாட்டிலிருந்த மின் இணைப்பு குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்யப்பட்டது. வணிக பயன்பாட்டு மதிப்பில் வரிவிதிப்பு செய்திருப்பதை குடியிருப்பு உபயோக பயன்பாட்டில் வரிவிதிப்பை மாற்றம் செய்து கொடுக்கும்படி கடந்த 06.04.2022–ல் ஆணையாளர் அவர்களுக்கு மனு செய்து கொண்டேன். இன்று வரை, என் மனுவின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏற்கனவே குடியிருப்பு பகுதிக்கு பழைய வரிவிதிப்பு எண் 115/10591 மற்றும் புதிய வரிவிதிப்பு எண் 115/033/900645 கட்டிடத்திற்கு உள்ள வரியை நகராட்சி நிர்வாக இயக்குநரக சுற்றறிக்கை ந.க. எண் 26821/R1/2024, நாள் 27.12.2024–ன் பிரகாரம் குடியிருப்புக்கான வரியை எந்த மாற்றமும் செய்யாமல் வணிக பயன்பாட்டில் உள்ள வரியை 01.04.2020 முதல் ரத்து செய்து குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 24.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளர் தனது 13.10.2025 நாளிட்ட கடிதம் எண் ம2.ஆ4B4/002858/2025–ன் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 2, வார்டு 33, பிளாட் எண் 93, K.K. நகர் கிழக்கு 4வது தெருவில் உள்ள வரிவிதிப்பு எண்கள் 115/033/900645 & 115/033/901162 முறையே குடியிருப்பு மற்றும் வணிகமாக உள்ளது.

115/033/900645 குடியிருப்பு அடிப்படையில் கணினியில் உள்ள அளவுகள்

| வ. எண் | கட்டிடத்தின் அளவுகள் | |
|---|---|---|
| 1. | தரைத்தளம் | 344 RCC |
| 2. | முதல் தளம் | 1200 RCC |
| மொத்த சதுரடி | | 1544 |

115/033/901162 வணிக அடிப்படையில் கணினியில் உள்ள அளவுகள்

| வ. எண் | கட்டிடத்தின் அளவுகள் | |
|---|---|---|
| 1. | தரைத்தளம் | 540 RCC |
| 2. | முதல் தளம் | 847 RCC |
| 3. | முதல் தளம் | 363 LR |
| மொத்த சதுரடி | | 1750 |

1. தற்போது கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் குடியிருப்பு வரிவிதிப்பிற்கு

| வ. எண் | கட்டிடத்தின் அளவுகள் | |
|---|---|---|
| 1. | தரைத்தளம் | 1200 RCC |
| 2. | தரைத் தளம் | 40 AC sheet |
| மொத்த சதுரடி | | 1240 |

2. தற்போது கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் குடியிருப்பு வரிவிதிப்பிற்கு

| வ. எண் | கட்டிடத்தின் அளவுகள் | |
|---|---|---|
| 1. | முதல் தளம் | 878 RCC |
| 2. | முதல் தளம் | 238 AC sheet |
| மொத்த சதுரடி | | 1116 |

மனுதாரர் அளித்த மனுவின் அடிப்படையில், மேற்கண்ட வணிக அடிப்படையில் உள்ள இடம் குடியிருப்பு அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், களஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்கண்ட அளவுகளின்படி தரைத்தளத்தினை 115/033/900645 குடியிருப்பு வரிவிதிப்பாகவும் மற்றும் 115/033/901162னை முதல் தளத்தினை குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்து கணினியில் சரி செய்யப்பட்டுள்ளது. இத்துடன் கேட்பு அறிவிப்பு நகல் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 05.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.11.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில், மதுரை மாநகராட்சி, மண்டலம் 4 (தெற்கு)—ன் உதவி ஆணையாளர் தனது 01.12.2025 நாளிட்ட மற்றொரு கடிதம் எண் ம2.ஆ4B4/002858/2025—ன் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:—

''மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 2, வார்டு 33, பிளாட் எண் 93, K.K. நகர் கிழக்கு 4வது தெருவில் உள்ள வரிவிதிப்பு எண்கள் 115/033/900645 & 115/033/901162 முறையே குடியிருப்பு மற்றும் வணிகமாக உள்ளது.

115/033/900645 குடியிருப்பு அடிப்படையில் கணினியில் உள்ள அளவுகள்

| வ. எண் | கட்டிடத்தின் அளவுகள் | |
|---|---|---|
| 1. | தரைத்தளம் | 344 RCC |
| 2. | முதல் தளம் | 1200 RCC |
| மொத்த சதுரடி | | 1544 |

115/033/901162 வணிக அடிப்படையில் கணினியில் உள்ள அளவுகள்

| வ. எண் | கட்டிடத்தின் அளவுகள் | |
|---|---|---|
| 1. | தரைத்தளம் | 540 RCC |
| 2. | முதல் தளம் | 847 RCC |
| 3. | முதல் தளம் | 363 LR |
| மொத்த சதுரடி | | 1750 |

தற்போது கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் குடியிருப்பு வரிவிதிப்பிற்கு

| வ. எண் | கட்டிடத்தின் அளவுகள் | |
|---|---|---|
| 1. | தரைத்தளம் | 1200 RCC |
| 2. | தரைத் தளம் | 40 AC sheet |
| மொத்த சதுரடி | | 1240 |

தற்போது கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் குடியிருப்பு வரிவிதிப்பிற்கு

| வ. எண் | கட்டிடத்தின் அளவுகள் | |
|---|---|---|
| 1. | முதல் தளம் | 878 RCC |
| 2. | முதல் தளம் | 238 AC sheet |
| மொத்த சதுரடி | | 1116 |

என்றவாறு இருந்ததை மின்பயன்பாடு மற்றும் மனுதாரர் அளித்த மனுவின் அடிப்படையில், மேற்கண்ட வணிக அடிப்படையில் உள்ள இடம் குடியிருப்பு அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், களஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்கண்ட அளவுகளின்படி தரைத்தளத்தினை 115/033/900645 குடியிருப்பு வரிவிதிப்பாகவும் மற்றும் 115/033/901162னை முதல் தளத்தினை குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்து கணினியில் சரி செய்யப்பட்டதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கும் மற்றும் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி மனுதாரர் வரிவிதிப்பு எண்ணிற்கு 2020–2021 இரண்டாம் அரையாண்டு முதல் 2021–2022 இரண்டாம் அரையாண்டு வரை ரூ.1,00,917/–(33639 + 33639+33639) கூடுதலாக செலுத்தியுள்ளார். இதில் 2022–23 முதல் அரையாண்டு முதல் 2025–26 இரண்டாம் அரையாண்டு வரை ரூ.71040/– (வரித் தொகை, அபராத தொகை மற்றும் குப்பை வரி உள்பட) வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் வரிவிதிப்பு எண்ணில் வணிக அடிப்படையில் உள்ளதை குடியிருப்பாக மாற்றம் செய்ததில் ஏற்கனவே செலுத்திய தொகை Advance Payment ஆக ரூ.29,877/– ஆக உள்ளது. எதிர்வரும் ஆண்டுகளில் கூடுதலாக செலுத்திய தொகை நேர்செய்யப்படும் என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. மனுதாரர் திரு.Rm.சேவுகன் செட்டியார் என்பவர் 05.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மதுரை மாநகராட்சியில் மண்டலம் எண் 2, வார்டு எண் 33, K.K. நகர் கிழக்கு 4–வது தெரு, பிளாட் எண் 93, கட்டிடம் என் மனைவி லெட்சுமி ஆச்சி பெயரில் வரிவிதிப்பு இருந்து வருகிறது. என் மனைவிக்கு உடல்நலம் சரியில்லாததால் என் மனைவிக்கு பதிலாக கணவன் என்கின்ற முறையில் முறைமன்ற நடுவத்தில் ஆஜராக என்னை அனுமதிக்க பணிவுடன் வேண்டுகிறேன்.

இந்த நிலையில், மதுரை மாநகராட்சியில் குடியிருப்பு பகுதிக்கு பழைய வரிவிதிப்பு எண் 115/10891, புதிய வரிவிதிப்பு எண் 115/033/900645 பிரகாரம் குடியிருப்பு பகுதிக்கும், பழைய வரிவிதிப்பு எண் 115/393155, புதிய வரிவதிப்பு எண் 115/033/901162 பிரகாரம் வணிக பகுதிக்கும் வரிவிதிப்பு இருந்து வந்தது. வணிக கட்டிடத்திற்கு 01.04.2012 முதல் அரைவருட வரியாக ரூ.24,566/– என வரி விதிக்கப்பட்டு 2018–2019–2வது அரையாண்டு முடிய வரி செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், வணிக பகுதியிலிருந்த நிறுவனங்கள் காலி செய்யப்பட்டு 23.09.2020 முதல் வணிக பயன்பாட்டிலிருந்த மின் இணைப்பு குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்யப்பட்டது. வணிக பயன்பாட்டு மதிப்பில் வரிவிதிப்பு செய்திருப்பதை குடியிருப்பு பயன்பாட்டில் வரிவிதிப்பை மாற்றம் செய்து கொடுக்கும்படி கடந்த 06.04.2022–ல் ஆணையாளர் அவர்களுக்கு மனு செய்து கொண்டேன். தற்போது வணிக வரி விதிப்பு எண்.115/033/901162 குடியிருப்பு வகைபாட்டிற்கு மாற்றம் செய்ததை ஏற்கனவே குடியிருப்பு பகுதிக்குக்கான வரிவிதிப்பு எண் 115/033/900645 உடன் இணைத்து ஒரே வரி விதிப்பு எண்ணாக மாற்றம் செய்யுமாறும், ஏற்கனவே மேற்கண்ட வரி விதிப்பு எண்களுக்கு கூடுதலாக வரி செலுத்தி உள்ள நிலையில் 14.10.2025 தேதியிட்ட Demand Noticeல் Property Tax Penalty ரூ.7,040/– என விதிக்கப்பட்டுள்ளது ஏற்க

தக்கது அல்ல என்பதால் அதனை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்குமாறும் இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''.

7. எதிர்மனுதாரர் சார்பில் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு)–ன் கண்காணிப்பாளர் 05.12.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 2, வார்டு 33, பிளாட் எண் 93, K.K. நகர் கிழக்கு 4வது தெருவில் உள்ள வரிவிதிப்பு எண்கள் 115/033/900645 & 115/033/901162 முறையே குடியிருப்பு மற்றும் வணிகமாக உள்ளது.

**<u>115/033/900645 குடியிருப்பு அடிப்படையில் கணினியில் உள்ள அளவுகள்</u>**

| வ. எண் | கட்டிடத்தின் அளவுகள் | |
|---|---|---|
| 1. | தரைத்தளம் | 344 RCC |
| 2. | முதல் தளம் | 1200 RCC |
| மொத்த சதுரடி | | 1544 |

**<u>115/033/901162 வணிக அடிப்படையில் கணினியில் உள்ள அளவுகள்</u>**

| வ. எண் | கட்டிடத்தின் அளவுகள் | |
|---|---|---|
| 1. | தரைத்தளம் | 540 RCC |
| 2. | முதல் தளம் | 847 RCC |
| 3. | முதல் தளம் | 363 LR |
| மொத்த சதுரடி | | 1750 |

**<u>1. தற்போது கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் குடியிருப்பு வரிவிதிப்பிற்கு</u>**

| வ. எண் | கட்டிடத்தின் அளவுகள் | |
|---|---|---|
| 1. | தரைத்தளம் | 1200 RCC |
| 2. | தரைத் தளம் | 40 AC sheet |
| மொத்த சதுரடி | | 1240 |

**<u>2. தற்போது கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் குடியிருப்பு வரிவிதிப்பிற்கு</u>**

| வ. எண் | கட்டிடத்தின் அளவுகள் | |
|---|---|---|
| 1. | முதல் தளம் | 878 RCC |
| 2. | முதல் தளம் | 238 AC sheet |
| மொத்த சதுரடி | | 1116 |

மனுதாரர் அளித்த மனுவின் அடிப்படையில், மேற்கண்ட வணிக அடிப்படையில் உள்ள இடம் குடியிருப்பு அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், களஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்கண்ட அளவுகளின்படி தரைத்தளத்திற்கு 115/033/900645 குடியிருப்பு வரிவிதிப்பாகவும் மற்றும் 115/033/901162ஐ முதல் தளத்தினை குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்தும் கணினியில் சரி செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் கோரியவாறு மனுதாரர் அபராத தொகை சம்மந்தமாக கோரிக்கை வைத்துள்ளார். மேற்படி அபராத தொகை என்பது அனுமதியற்ற கூடுதல் கட்டிடத்திற்கான அபராத தொகை என்பதால் மாற்றம் செய்ய வழிவகை இல்லை. வரி விதிப்பு எண்கள்.115/033/900645 மற்றும் 115/033/901162 ஆகியவற்றை இணைத்து ஒரே வரி விதிப்பு எண்ணாக மாற்றுவதற்கு மனுதாரர் புதிதாக மனு சமர்ப்பிக்கும் பட்சத்தில் அம்மனுவை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மனுதாரர் ஏற்கனவே செலுத்திய தொகை

Advance Payment ரூ.29,877/– ஆக உள்ளதை எதிர் வரும் ஆண்டுகளில் கூடுதலாக செலுத்திய தொகை நேர் செய்யப்படும் என்ற விவரத்தையும் இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

8. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மற்றும் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு), உதவி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் கண்காணிப்பாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மதுரை மாநகராட்சியில் மண்டலம் எண் 2, வார்டு எண் 33, K.K. நகர் கிழக்கு 4–வது தெரு, பிளாட் எண் 93, கட்டிடம் தனது மனைவி லெட்சுமி ஆச்சி பெயரில் உள்ள வரிவிதிப்பில், குடியிருப்பு பகுதிக்கு பழைய வரிவிதிப்பு எண் 115/10891, புதிய வரிவிதிப்பு எண் 115/033/900645 பிரகாரம் குடியிருப்பு பகுதிக்கும், பழைய வரிவிதிப்பு எண் 115/393155, புதிய வரிவிதிப்பு எண் 115/033/901162 பிரகாரம் வணிக பகுதிக்கும் வரி விதிக்கப்பட்டிருந்தது என்பதும், வணிக கட்டிடத்திற்கு 01.04.2012 முதல் அரைவருட வரியாக ரூ.24,566/– என வரி விதிக்கப்பட்டு 2018–2019–2வது அரையாண்டு முடிய வரி செலுத்தப்பட்டிருந்த நிலையில், வணிக பகுதியிலிருந்த நிறுவனங்கள் காலி செய்யப்பட்டு 23.09.2020 முதல் வணிக பயன்பாட்டிலிருந்த மின் இணைப்பு குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்யப்பட்டு, வணிக பயன்பாட்டு மதிப்பில் வரிவிதிப்பு செய்திருப்பதை குடியிருப்பு பயன்பாட்டில் வரிவிதிப்பை மாற்றம் செய்து கொடுக்கும்படி மதுரை மாநகராட்சிக்கு மனு அளிக்கப்பட்டது என்பதும், தற்போது வணிக வரி விதிப்பு எண்.115/033/901162 குடியிருப்பு வகைபாட்டிற்கு மாற்றம் செய்ததை ஏற்கனவே குடியிருப்பு பகுதிக்குக்கான வரிவிதிப்பு எண் 115/033/900645 உடன் இணைத்து ஒரே வரி விதிப்பு எண்ணாக மாற்றம் செய்யுமாறும், ஏற்கனவே மேற்கண்ட வரி விதிப்பு எண்களுக்கு கூடுதலாக வரி செலுத்தி உள்ள நிலையில் 14.10.2025 தேதியிட்ட Demand Noticeல் Property Tax Penalty ரூ.7,040/– என விதிக்கப்பட்டுள்ளது ஏற்க தக்கது அல்ல என்பதால் அதனை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 2, வார்டு 33, பிளாட் எண் 93, K.K. நகர் கிழக்கு 4வது தெருவில் உள்ள குடியிருப்பு அடிப்படையில் உள்ள வரிவிதிப்பு எண் 115/033/900645–ன் கட்டிடத்தினை, கள ஆய்வு செய்ததில், தரைத் தளம் 1240 சதுரடி ஆக உள்ளது என்பதும், வணிக அடிப்படையில் உள்ள வரிவிதிப்பு எண் 115/033/901162–ன் கட்டிடத்தினை, கள ஆய்வு செய்ததில், முதல் தளம் 1116 சதுரடி ஆக உள்ளது என்பதும், மனுதாரர் அளித்த மனுவின் அடிப்படையில், மேற்கண்ட வணிக அடிப்படையில் உள்ள இடம் குடியிருப்பு அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், களஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்கண்ட அளவுகளின்படி தரைத்தளத்திற்கு வரிவிதிப்பு எண் 115/033/900645 குடியிருப்பு பகுதியாகவும் மற்றும் வரி விதிப்பு எண் 115/033/901162 முதல் தளத்தினை குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்தும் கணினியில் சரி செய்யப்பட்டுள்ளது என்பதும், மனுதாரருக்கு விதிக்கப்பட்ட அபராத தொகை, அனுமதியற்ற கூடுதல் கட்டிடத்திற்கான அபராத தொகை என்பதால் மாற்றம் செய்ய வழிவகை இல்லை என்பதும், வரி விதிப்பு எண்கள்.115/033/900645 மற்றும் 115/033/901162 ஆகியவற்றை இணைத்து ஒரே வரி விதிப்பு எண்ணாக மாற்றுவதற்கு மனுதாரர் புதிதாக மனு சமர்ப்பிக்கும் பட்சத்தில் அம்மனுவை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், மனுதாரர் ஏற்கனவே கூடுதலாக செலுத்திய தொகை – Advance Payment ரூ.29,877/– ஆக உள்ளதை எதிர் வரும் ஆண்டுகளில் நேர் செய்யப்படும் என்பதும் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)ன் உதவி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் கண்காணிப்பாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 2–ன் கண்காணிப்பாளர் அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, வரி விதிப்பு எண்கள்.115/033/900645 மற்றும் 115/033/901162 ஆகியவற்றை இணைத்து ஒரே வரி விதிப்பு எண்ணாக மாற்றுவதற்கு மனுதாரர் புதிதாக மனு சமர்ப்பிக்கும் பட்சத்தில் அம்மனுவை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும், மனுதாரர் ஏற்கனவே கூடுதலாக செலுத்திய தொகையினை எதிர் வரும் ஆண்டுகளில் நேர் செய்யப்படுவதை உறுதி செய்து கொள்ளுமாறும் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளருக்கு உத்திரவிடுமாறு, மதுரை மாநகராட்சி ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. Rm.சேவுகன் செட்டியார்,
கதவு எண் 8/6, சிவபிரகாசம் தெரு,
தியாகராய நகர்,
சென்னை–600 017.

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை–625 002.

(3) உதவி ஆணையர்,
மண்டலம் 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
ரேஸ் கோர்ஸ் சாலை,
மதுரை–625 002.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

17/2/26
செயலாளர்
17/2/26